**OS.No.554/2021 & OS.No.16/2016 P.W.1-அனந்தராஜன் 19.01.2026**

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திக் கொண்ட சமயத்தில் 1ம் பிரதிவாதி ஜசக்சந்திரா தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஆவணம் பதிவு செய்யப்பட்டது குறித்து 1ம் பிரதிவாதி ஜசக்சந்திராவிற்கு தகவல் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட விவரத்தை 1ம் பிரதிவாதி ஜசக்சந்திராவிற்கு எப்பொழுது தெரிவிக்கப்பட்டது என்று தேதி குறிப்பிட்டு எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்திற்கு பிறகு கூட தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தை நானும், 2வது பிரதிவாதியான என் தந்தை பாலகங்காதரதிலகரும் சேர்ந்து மோசடியாக தயாரித்ததால் தான் 1ம் பிரதிவாதிக்கு அது குறித்து முறைப்படி தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை பாலகங்காதரதிலகர் 2012ம் ஆண்டில் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் மரக்கடை மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். என் தந்தை பாலகங்காதரதிலகர் வட்டிக்கு விடும் தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை. என் தந்தை பொதுவாக கடன் கொடுத்தால் கடன் வாங்கும் நபரிடம் ஒரு பொது அதிகார பத்திரம் வாங்கி வைத்து கொள்வது பழக்கம் என்றால் அவ்வாறு என் தந்தை கடன் கொடுக்கும் தொழில் செய்யவில்லை. செப்டம்பர் 2010ல் 1ம் பிரதிவாதி, என் தந்தையை அணுகி ரூபாய் 10 லட்சம் கடன் கேட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்து சம்பந்தமாக நடந்த ஏற்பாடுகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து குறித்து எனது தந்தை, 1ம் பிரதிவாதியிடம் ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுக்க சொன்ன விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதன் படி 1ம் பிரதிவாதி ஜசக்சந்திரா, எனது தந்தையின் பெயருக்கு 15.09.2010 தேதியிட்ட ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த பொது அதிகார பத்திரத்தின் அசல் தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி ஜசக்சந்திராவிற்கு என் அப்பா ரூபாய் 10 லட்சம் கடனாக கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடனே

கொடுக்கவில்லை. என் அப்பா ரூபாய் 10 லட்சம் 1ம் பிரதிவாதி ஐசக்சந்திராவிற்கு கடனாக கொடுத்தார் என்றும், அதற்கு 18 சதவீதம் வட்டி கேட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த கடனுக்கு ஒரு பிணையாக தான் வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஜுன் 2013ல் 1ம் பிரதிவாதி ஐசக்சந்திரா, என் அப்பாவை அணுகி கடன் தொகையை திரும்ப செலுத்த தயாராக இருக்கிறேன் என்றும், அந்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்யுமாறு கேட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த சமயத்தில் தான் என் தந்தை, 1ம் பிரதிவாதியிடம் வா.சா.ஆ.1 கிரய பத்திரம் குறித்து தெரிவித்தார் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)